முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.02.02.2026

EA.No. 1/19 in EP 40/2017

எ.மா.சா.1 ராயப்பன்

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனு சொத்து எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். புனித அந்தோணியர் ஆலய நிர்வாகிகள் இந்த மனுவின் மனுதாரர்கள் என்றால் சரி. மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்த ஆவணங்களை நான் படித்து பார்த்தேன். மனுசொத்தை எழுதி கொடுத்தது தங்கவேல் என்ற நபர் என்றால் சரி. தங்கவேலை எனக்கு தெரியும். இந்த நீதிமன்றத்தில் தற்போது ஆஜராகி இருக்கும் நபர் தங்கவேல் என்றால் சரி. தங்கவேலிடம் இருந்து நான் சொத்து வாங்கி உள்ளேன். மனுசொத்து தவறான விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது மனுசொத்து என்பது 57 ச.அடி உள்ள கழிவுநீர் செல்லகூடிய ஓடை ஆகும் அது என் பெயரில் உள்ளது. இந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு வருவாய்துறை தாலுகா சர்வேயர் உதவியுடன் மனுசொத்தை அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் செடிகள் வளர்த்த இடத்தை அளந்தார்கள் என்னுடைய இடத்தை அளந்தார்கள். அப்போது நான் உடன் இருந்தேன் ஆணையரிடம் எடுத்து சொல்லியும் கேட்கவில்லை. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை ரத்து செய்ய மனுதாக்கல் செய்ததில் அந்த மனுவை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்தது என்றால் சரியல்ல. உண்மையில் மனு தள்ளுபடி செய்யபட்டது என்றாலும் அதற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில் லை என்றாலும் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்த இரண்டு ஆவணங்களில் என் பெயருக்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் முன்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் ஆலய வளாகம் என்றால் சரி. என்

வீட்டிற்கு மேற்கு பக்கம் கல்லறை தோட்டம் என்றால் சரியல்ல. 1 ¼ செண்ட் இடம் தனிநபருக்கு உள்ளது அடுத்து கல்லறைதோட்டம் உள்ளது. அந்த கல்லறைதோட்டத்திற்கு காம்பவுண்ட்சுவர் கட்டக்கூடாது என பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் தங்கவேலுவின் சகோதரி சுயம்புவின் சொத்து உள்ளது. சுயம்புவை தொந்தரவு செய்து அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு கிழக்கு எல்லையில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரி. அதற்கு அடுத்து எனக்கு 1 ¼ செண்ட் இடமும் உள்ளது. அந்த 1 ¼ செண்ட்டை தான் நீதிமன்ற ஆணையரும் தாலுகா சர்வேயரும் அளந்தார்கள். அதன் சர்வே எண்.570/48 ஆகும். அந்த சொத்து என்னுடையது என்பதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் உள்ளது. தற்போது அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த 1 ¼ செண்ட் இடத்தை வறுவேல் செட்டியாரிடம் 1993 ல் விலைக்கு வாங்கினேன். அதற்கு பட்டா வரிரசீதுகள் என்னுடைய பெயரில் மாற்றறம் செய்துள்ளேன். அதற்கான ஆவணத்தை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஏற்கனவே தாக்கல் செய்து விட்டடேன். எனது வீட்டின் கிழக்குஎல்லையில் உள்ள காம்பவுண்ட் சுவர் சுமார் 5 அடி உயரம் இருக்கும் அதில் கேட் அமைத்துள்ளேன். அந்த காம்பவுண்ட் சுவர் சுமார் 25 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது என்றால் சரி. அந்த காம்பவுண்ட் சுவர் எனது வீட்டின் வடக்கு பக்கமுள்ள வீட்டின் கிழக்கு பக்க காம்பவுண்ட் சுவரின் தொடர்ச்சியாகவும் நேர்கோட்டில் உள்ளது என்றால் சரியல்ல. ஒரு நபரின் வெளியயே விட்டு காம்பவுண்ட் சுவர் எழுப்ப மாட்டார் என்றால் சரிதான் எனது வீட்டின் வாசல் சர்ச்சை பார்த்து உள்ளதால் சர்ச் மறைக்கககூடாது என்று தோட்டத்தை அமைத்து தோட்டத்திற்குள்ளாக காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன்.எனது வீட்டின் கிழக்கு பக்கம் பாதை என்று எனது ஆவணத்தில்

சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.அந்த பத்திரத்தை தாக்கல் செய்தால் அதன் விவரம் தெரியவரும் என்றால் சரி நான் ஏற்கனவே தாக்கல் செய்து விட்டேன். தங்கவேல் ஆலயத்திற்கு சொத்து எழுதி கொடுத்த பின் தான் எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரி. என்னுடைய பத்திரத்தின் போது ஆலயத்திற்கு எழுதி கொடுத்த பத்திரத்தின் விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள பாதை அதற்கு கிழக்கே உள்ள 1 சென்ட் இடத்தை அபகரிக்கும் நோக்கத்தில் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. காம்பவுண்ட் சுவருக்கு கிழக்கே உள்ள இடம் காலி இடமாக உள்ளது என்றால் சரியல்ல பாதி இடத்தில் செடிகள் வைத்து வளர்த்து வருகிறேன். காம்பவுண்ட் சுவரின் கிழக்கு பக்கமுள்ள பாதையையும் 1 சென்ட் இடத்தையும் பொது மக்கள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தங்கவேலுக்கு சொத்து இல்லை என்று பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாத்தியமில்லாத சொத்தை எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் தங்கவேலுக்கு எதிராக நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மனுசொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கை படி மனுசொத்து புமியில் உள்ளது என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுசொத்திற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள ஆவணங்களை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுசொத்திற்கு தெற்கு பக்கம் செக்கு உள்ளது. அதன் வயது சுமார் 300 இருக்கும். அந்த செக்கு 1985 ல் இருந்து உபயோகத்தில் இல்லை. அந்த செக்கு மனுசொத்தின் விவரத்தை நிருபிக்கும் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)